



# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி





மலர் 2 சென்னை | தினசரி | 4 பக்கம் ஞாயிற்றுக்கிழமை, மார்ச் 05, 2023 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 234

## அண்ணா பல்கலைக்கழகத்தில் போலியான கௌரவ டாக்டரேட் பட்டம் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கிய 2 நபர்கள் கைது. ஐபோன், 2 லேப்டாப், கணினி மற்றும் உபகரணங்கள், போலியான சான்றிதழ்கள், 96 பதக்கங்கள் மற்றும் பொருட்கள் பறிமுதல்

சென்னை, மார்ச் 05 2023: கடந்த 26.02.2023 அன்று, கிண்டி அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள விவேகானந்த ஆடிட்டோரியத்தில் கௌரவ டாக்டர் பட்டமளிப்பு மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றதாகவும், நிகழ்ச்சியை நடத்திய இண்டர்நேஷனல் ஆண்டி-கரப்ஷன் அண்டு ஹியூமன் ரைட்ஸ் கவுன்சில் அமைப்பினர் போலியாக கடிதம் கொடுத்து அனுமதி பெற்று, நிகழ்ச்சியை நடத்தி, போலியாக கௌரவ டாக்டர் பட்டம் கொடுத்துள்ளதாகவும், மேற்படி அமைப்பினர் மீது நடவடிக்கை எடுக்கும்படியும், அண்ணா பல்கலைக்கழக பதிவாளர் கொடுத்த புகார் மீது ஜெ-4 கோட்டூர்புரம் காவல் நிலையத்தில் மோசடி உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

ஜெ-4 கோட்டூர்புரம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் விசாரணை செய்ததில், ஆண்டி-கரப்ஷன் அண்டு ஹியூமன் ரைட்ஸ் கவுன்சில் அமைப்பினர் ஓய்வு பெற்ற நீதிபதி பெயரில் போலியாக பரிந்துரை கடிதத்தை தயார் செய்து, அதில் அவரது கையெழுத்தை போலியாக போட்டு அண்ணா பல்கலைக்கழகத்தில் இந்த போலியான கடிதத்தை கொடுத்து, ஆடிட்டோரியத்தில் நிகழ்ச்சி நடத்த அனுமதி பெற்றதும், பட்டம் வழங்கக்கூடிய அங்கீகாரம் இல்லாமல் நிகழ்ச்சியை நடத்தி, சமூகத்தில் நல்ல அந்தஸ்தில் உள்ள நபர்களுக்கு போலியான கௌரவ டாக்டரேட் பட்டம் மற்றும் மற்ற நபர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கி, மோசடியில் ஈடுபட்டதும் தெரியவந்தது.





அதன்பேரில், காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, மேற்படி மோசடியில் ஈடுபட்ட முக்கிய எதிரி ஹரிஷ், வ/24, (சொந்த ஊர் தஞ்சாவூர்) த/பெ.ராஜு, வாஞ்சிநாதன் தெரு, பிரேமா அவென்யூ, திருமுல்லைவாயல் மற்றும் மகாராஜன், வ/27, (சொந்த ஊர் திருநெல்வேலி) த/பெ.ராமசாமி, சேக்கிழார் 2வது தெரு, எம்.ஜி.ஆர்.நகர், சென்னை ஆகிய இருவரை இன்று (05.03.2023) கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து 1 ஐபோன், 2 லேப்டாப், கணினி மற்றும் உபகரணங்கள், போலி டாக்டர் பட்டத்திற்கான சான்றிதழ்கள், போலியான சான்றிதழ்கள், 96 பதக்கங்கள், ரப்பர் முத்திரைகள் மற்றும் பொருட்கள் கைப்பற்றப்பட்டது.

விசாரணையில் எதரி ஹரிஷ், பொறியியல் பட்டதாரி என்பதும், முக்கிய நபர்களின் படங்கள், கையெழுத்து போன்றவற்றை இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து, மோசடிக்கு பயன்படுத்தியதும், மற்றொரு எதிரி மகாராஜன் 9ம் வகுப்பு படித்துள்ளதும், இவர்கள் மேற்படி ஆண்டி-கரப்ஷன் அண்டு ஹியூமன் ரைட்ஸ் கவுன்சில் அமைப்பு மூலம் ஏற்கனவே 2021ம் ஆண்டு 2 பட்டமளிப்பு நிகழ்ச்சிகள் மற்றும் 2022ம் ஆண்டு 2 பட்டமளிப்பு நிகழ்ச்சிகள் நடத்தி மோசடியில் ஈடுபட்டதும் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர்.

## மது பிரியர்களே உஷார் மது போதையில் வாகனம் ஓட்டினால் அபராதம் 10 ஆயிரம் மது போதையில் வாகனம் ஓட்டிய வழக்குகளில் ரூபாய் 5 கோடிக்கு மேல் அபராதம் வசூல்

சென்னை, மார்ச் 05 2023: சென்னை பெருநகர காவல்துறை விபத்தை குறைக்கும் வண்ணம் மோட்டர்வாகனச் சட்டத்தை திறம்பட அமலாக்கம் செய்து சாலை போக்குவரத்து விபத்துகளைக் குறைத்துவருகிறது.

சாலை விபத்துக்களில் உயிரிழப்புகள் ஏற்படுவதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று மது போதையில் வாகனம் ஓட்டுவதாகும். எனவே மது போதையில் வாகனம் ஓட்டுவதற்கு சட்டத்தில் கடுமையான தடுப்பு நடவடிக்கையாக தண்டனை வழங்கப்படுகிறது. அபராதத் தொகைரூ.10,000/- அதிகமாக இருப்பதால் பலர் அபராதத்தைச் செலுத்துவதில்லை, ஆனால் நீதிமன்றத்தில் உள்ள மெய்நிகர் பிரிவிலிருந்து அவர்களின் தொலைபேசி எண்களுக்கு அழைப்பு வந்தாலும் அபாரதம் செலுத்துவதில்லை. மேலும் 7,417 மது போதை வழக்குகள் தீர்க்கப்படாமல் நிலுவையில் உள்ளன. எனவே இதுபோன்ற விதி மீறுபவர்களுக்கு நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்து சென்னை பெருநகரில் 10 இடங்களில் அமைந்துள்ள அழைப்பு மையங்கள் மூலம் தகவல் தெரிவித்து, கடந்த 26.02.2023 முதல் 04.03.2023 வரை அவர்களை நேரில் வரவழைத்து வழக்குகளை முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன் விளைவாக சென்னை பெருநகர போக்குவரத்து காவல் துறையின் அழைப்பு மையங்களின் அழைப்பை ஏற்று 594 பேர் ஆஜராகி அவர்களது நிலுவை வழக்குகளை இணையதளம் மூலம் செலுத்தினார்கள். மேலும் பலர் அழைப்பு மையங்களுக்கு வெளியில் பணம் செலுத்தியதால், அவர்கள் வேறுவிதமாக அபராதம் செலுத்தியிருந்தாலும், அழைப்பு மையங்களின் உதவியுடன் முடிந்த வழக்குகளின் விவரங்களையும் அபராதத் தொகையையும், இந்த அழைப்பு மையங்களில் இருந்து சேகரித்தனர். இந்த தொடர் நடவடிக்கையின் மூலம் 10 அழைப்பு மையங்களில் 810 வழக்குகள் தீர்வு காணப்பட்டு அபராதத் தொகையாக ரூ. 83,03,000/- செலுத்தப்பட்டன.

கடந்த 5 வாரங்களில் அழைப்பு மையங்களின் இதே போன்ற நடவடிக்கைகளால் 4,112 வழக்குகள் தீர்க்கப்பட்டு, ரூ.4,26,13,000/- அபராதம் தொகை செலுத்தப்பட்டன.

இதனால் ஆறாவது வாரத்தில் அழைப்பு மையங்கள் மூலம் நிலுவையில் இருந்த 4,922 குடிபோதை வழக்குகள் தீர்க்கப்பட்டு, ரூ.5,09,16,000/- அபராதத் தொகை வசூலிக்கப்பட்டது.

இந்த தொடர் நடவடிக்கையின் மூலம் நிலுவையில் உள்ள குடிபோதை வழக்குகளை தீர்வு காண்பதற்காக போக்குவரத்து விதி மீறல்களுக்கு எதிராக செயல்படு பவர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் குடித்துவிட்டு வாகனம் ஓட்டி அபராதம் செலுத்தாதவர்களின் சம்பந்தப்பட்ட வாகனம் மட்டுமின்றி, வேறு எந்த வாகனங்களாக இருந்தாலும், அசையும் சொத்துக்கள் உட்பட பறிமுதல் செய்ய நீதிமன்ற ஆணை பிறப்பிக்கப்படும் எனஎச்சரிக்கப்படுகிறது. ஏற்கனவே இது போன்று குடி போதையில் வாகனம் ஓட்டி அபராதம் செலுத்தாதவர்களின் அசையும் சொத்துக்களை பறிமுதல் செய்வதற்கு இதுவரை 347 நீதிமன்ற ஆணை பிறப்பிக்கப்பட்டு அவை நடைமுறைப்படுத்த செயல்பாட்டில் உள்ளன என்று தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

## சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறையினர் போக்குவரத்து மேம்பாட்டுக்காக வணிகர் சங்கங்களுடன் கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டது

சென்னை, மார்ச் 05 2023: மோட்டார் வாகனச் சட்டத்தை அமல்படுத்த சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறையினர் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கவும், போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும், விபத்துகளைக் குறைக்கவும், சாலை பயனாளர்களிடையே சாலைப் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து விதிகளை கடைபிடிப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.

சென்னை பெருநகரில் போக்குவரத்து நிலைமையை மேம்படுத்த சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறையினர் உள்ளூர் குடியிருப்போர் நலச் சங்கம், வியாபாரிகள் சங்கம் ஆட்டோ மற்றும் டாக்ஸி ஓட்டுநர்கள் போன்ற பல்வேறு சங்கங்களுடன் வழக்கமான இடைவெளியில் கலந்தாய்வு கூட்டங்களை நடத்த ஏற்பாடு செய்து வருகின்றன. சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறையினர் நேற்று (04.03.2023) நகரின் முக்கியமான 10 இடங்களில் வணிகர் சங்கங்களுடன் கூட்டங்களை நடத்தினர். இதில் கோயம்பேடு பகுதியில் நடந்த கலந்தாய்வு கூட்டத்தில் போக்குவரத்து காவல் இணை ஆணையாளர், தெற்கு அவர்கள் கலந்து கொண்டு வணிகர் சங்க நிர்வாகிகளுடன் கலந்தாய்வு நடத்தினார்.

இதேபோல் காவல் துணை ஆணையாளர் வடக்கு, தெற்கு மற்றும் கிழக்கு ஆகியோர் முறையே பூக்கடை, வேளச்சேரி மற்றும் புரசைவாக்கம் ஆகிய இடங்களில் நடைபெற்ற கூட்டங்களில் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் வாகனப் போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பைப் பாதிக்கும் பல்வேறு பிரச்னைகள் குறித்து விவாதிக்கப்பட்டதுடன், தொடர் நடவடிக்கைகளுக்காக கருத்துக்கள் கோரப்பட்டன.

கோயம்பேடு வியாபாரிகள் மற்றும் சந்தைக்குச் செல்வோர் முன்பு போலவே பூந்தமல்லிக்கு இபி ரோடு வழியாகச் செல்லவும் பெருவாரியான எம் டி சி பேருந்துகளை இயக்க அனுமதிக்கவும் போக்குவரத்து சிக்னல் அமைக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். இதுபோன்ற போக்குவரத்து பிரச்சனைகளை தவிர்ப்பதற்காகாவும், தொடர்பு கொள்ளவும் அண்ணாநகர் பகுதியின் அலுவலகப் பணியாளர்கள் மற்றும் சென்னை பெருநகர போக்குவரத்து அதிகாரிகள் அடங்கிய வாட்ஸ் அப் குழு உருவாக்கப்பட்டது. மேலும் கோயம்படு வணிக கூட்டத்தில் போக்குவரத்து காவல் இணை ஆணையாளர், தெற்கு அவர்கள், அவர்களது கோரிக்கைகளை பரிசீலனை செய்து தீர்வு காண்பதற்கு அறிவுரை வழங்கினார். இதேபோன்று பூக்கடை பகுதி வியாபாரிகள் கனரக வாகனங்கள் நுழைவு நேரத்தை நீட்டிக்கவும், காய்கறிகைகளை இறக்குவதற்கான நேரத்தை காலை 10 மணி வரை அனுமதிக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதே போன்று வேளச்சேரி பகுதியில் போக்குவரத்து அமலாக்கத்தை மேம்படுத்த 100 அடி சாலையில் ஏ என் பி ஆர் கேமராக்களை நிறுவவும், போக்குவரத்து ஒழுங்குமுறையை மேம்படுத்த 100 தடுப்புகளை வழங்கவும் வணிகர்கள் முன்வந்தனர். மேலும், போக்குவரத்து பிரச்சனைகளை தவிர்ப்பதற்காகாவும், தொடர்பு கொள்ளவும் வணிகர் சங்கத்தினர் மற்றும் சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறையினர்களை உள்ளடக்கிய வாட்ஸ்அப் குழு உருவாக்கப்பட்டது.

ஆலோசிக்கப்பட்ட பல்வேறு கருத்துக்கள் சேகரிக்கப்பட்டு குறிப்பிட்ட காலத்திற்குள் நடைமுறைப்படுத்தப்படும்.







"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



## புல்லர்டன் இந்தியா பசு விகாஸ் தினத்தின் 5வது பதிப்பை ஏற்பாடு செய்துள்ளது, தமிழ்நாட்டில் 10900 க்கும் அதிகமான கால்நடைகள் இலவச சிகிச்சையை பெற்றன



சென்னை, மார்ச் 05 2023: இந்தியாவின் முன்னணி என் பி எஃப் சி-களில் ஒன்றான ஃபுல்லர்டன் இந்தியா, அதன் வருடாந்திர பசு விகாஸ் தினத்தின் மூலம், கள கால்நடை பராமரிப்பு விழிப்புணர்வு முனைப்பு முயற்சிகளில் மிகப்பெரிய ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. தமிழகம் முழுவதும் ஒரே நேரத்தில் 61 இடங்களில் 10,900க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு இலவச பரிசோதனை மற்றும் மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டு கால்நடை பராமரிப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. புல்லர்டன் இந்தியா, 2023 பிப்ரவரி 4 முதல் 11 வரை மாநிலம் முழுவதும் 24 இடங்களில் கால்நடை உரிமையாளர்களுக்கு இலவச சுகாதார பரிசோதனை முகாம்களை ஏற்பாடு செய்தது, இதன் மூலம் 1800 க்கும் மேற்பட்ட கால்நடைகள் பயனடைந்தன.

இந்த மிகப் பெரிய திட்டத்தின் ஒரு பகுதியாக, நாடு முழுவதும் உள்ள 71,400 க்கும் அதிகமான கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்து, 15 மாநிலங்களில் 500க்கும் மேற்பட்ட கிராமங்களை உள்ளடக்கிய 374 இடங்களில் இந்த முகாம்கள் ஒரே நேரத்தில் நடத்தப்பட்டன.

இந்த முகாம்கள், கால்நடை மருத்துவர்களால் கால்நடைகளுக்கு இலவச மருத்துவ பரிசோதனை, கால்நடைகளுக்கு இலவச மருந்து மற்றும் தடுப்பூசிகள் விநியோகம், கறவை மாடுகளுக்கு ஊறு திறனை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் போன்ற சேவைகளை வழங்கியது. புல்லர்டன் இந்தியா, 2023 பிப்ரவரி 4 முதல் 11 வரை இந்தியா முழுவதும் 245 இடங்களில் கால்நடை உரிமையாளர்களுக்கு இலவச உடல்நல பரிசோதனை முகாம்களை ஏற்பாடு செய்தது, 20,400க்கும் மேற்பட்டோர் பயனடைந்தனர்.

இந்த நிறுவனத்தின் தனித்துவமான முன்முயற்சியை எடுத்துரைத்து, ஃபுல்லர்டன் இந்தியாவின் தலைமைச் செயல் அதிகாரி மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. சாந்தனு மித்ரா, "புல்லர்டன் இந்தியாவில் நாங்கள் பின்தங்கிய சமூகங்கள் முழுவதும் உள்ளடங்கிய நிதி வளர்ச்சியை செயல்படுத்துகிறோம். இந்த தத்துவமானது, அவர்களின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அவர்களுக்கு உதவுவதோடு சமூகத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கும் உதவி, எங்கள் வாடிக்கையாளர்களுடன் எங்களை நெருக்கமாக கொண்டுவருகிறது. எங்கள் சமூக மேம்பாட்டுத் திட்டங்கள், கிராமப்புற சமூகங்களிடையே அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி, அவர்களின் வருமான வழிகளை அதிகரித்து, வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றன. கிராமப்புறங்களில் வசிப்பவர்களுக்கு, கால்நடைகள் இன்றியமையாததாக இருப்பதால், எங்கள் வாடிக்கையாளர்களுக்கு மட்டுமல்ல, சமூக மதிப்பை மேம்படுத்தும் வகையில், பெரிய அளவிலான விவசாய சமூகங்களுக்கும் கால்நடை சுகாதார வசதிகளை வழங்குவதில் கவனம் செலுத்துவதற்காக, ஆண்டுதோறும், பசு விகாஸ் தினத்தை நாங்கள் நடத்துகிறோம். இந்த முயற்சி, கால்நடை உரிமையாளர்கள் தங்கள் கால்நடைகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்தி, அவர்களின் வீட்டு வருமானத்தை அதிகரித்து, நேர்மறையான சமூக தாக்கத்தை ஏற்படுத்துவதைக் கண்டுள்ளது." என்று கூறினார்.

இந்த நிறுவனம் தனது முதல் பசுவிகாஸ் தினத்தை 2014 இல் ஒரு நாள் கால்நடை பராமரிப்பு முகாமாக இந்தியா முழுவதும் பல்வேறு இடங்களில் அறிமுகப்படுத்தியது, கிராமப்புற மக்களின் கால்நடைகளை பராமரிக்க உதவுவதற்காக அங்கே நிறுவன ஊழியர்கள் அவர்களுடன் இணைந்திருந்தனர்.

பல ஆண்டுகளாக, புல்லர்டன் இந்தியா, கால்நடை உரிமையாளர்களுக்கு தேவையான கால்நடை சுகாதார பராமரிப்பு வசதிகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்க உதவியது, இதனால் அவர்கள் கால்நடைகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்தவும், அவர்களின் வீட்டு வருமானத்தை அதிகரிக்கவும் முடியும். இந்த பசுவிகாஸ் தினத்தில் இதுவரை 2,71,000 கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தது, 80,000க்கும் மேற்பட்ட கால்நடை உரிமையாளர்கள் பயனடைந்துள்ளனர்.

பசுவிகாஸ் தினத்தில் கருத்து தெரிவித்த ஃபுல்லர்டன் இந்தியா -வின் தலைமை மக்கள் அதிகாரி திரு. சுவாமிநாதன் சுப்ரமணியன், "இந்தியாவின் கிராமப்புற முக்கியபகுதிகளில் உள்ள பல விவசாயிகள் தங்கள் வருமானத்திற்காக கால்நடை வளர்ப்பை நம்பியிருக்கிறார்கள், மேலும் எங்களது வருடாந்திர பசுவிகாஸ் தின திட்டத்தின் மூலம், தரமான கால்நடை சுகாதாரத்திற்கான அணுகலுடன் முழுமையான சேவைகளை அவர்களுக்கு வழங்குவதன் மூலம் இந்த சமூகத்தை மேம்படுத்துவதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம். இது எங்கள் ஊழியர்களுக்கு ஒரு நல்ல நோக்கத்திற்காக மனமுவந்து சமூகத்திற்குத் திரும்பக் கொடுப்பதற்கான வாய்ப்பை வழங்கியது." என்று கூறினார்.

2014 இல் தொடங்கப்பட்ட பிறகு, பசுவிகாஸ் தினம் 2015, 2018, 2019 மற்றும் 2023 இல் நடைபெற்றது. புல்லர்டன் இந்தியா, 2015 லிம்கா புத்தகத்தில் இந்தியா முழுவதும் ஏற்பாடு செய்யப்பட்ட மிகப்பெரிய ஒற்றைய நாள் கால்நடை பராமரிப்பு முகாமாகவும், 2018 ஆம் ஆண்டில் பெஸ்ட் ஆஃப் இந்தியா ரெக்கார்ட்ஸ் இல் உலகின் மிகப்பெரிய ஒற்றைய நாள் கால்நடை பராமரிப்பு முகாமாகவும், மேலும் 2019 ஆம் ஆண்டில் வேர்ல்ட் புக்ஸ் ஆப் ரெகார்ட்ஸ் ஆல் கால்நடை பராமரிப்புக்கான மிகப்பெரிய முகாமாகவும் இடம்பெற்றது.

## தரமான கம்பிகள் மற்றும் மின்சார தீ பாதுகாப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தைப் பற்றி ஆராய தொழில்துறை தலைவர்களை ஆர் ஆர் கேபில்ஸ் அழைக்கிறது.




சென்னை, மார்ச் 05 2023: பொதுவாக குறைந்த தரம் கொண்ட கம்பிகள் மற்றும் கேபிள்களில் இருந்து உருவாகும் மின்சார ஷார்ட் சர்க்யூட்கள் இந்தியாவில் தீ விபத்துகளுக்கு முக்கிய காரணமாக இருக்கிறது. ஏ சி எஸ் ஐ தரவுகளின்படி, முந்தைய பத்து ஆண்டுகளில் ஏற்பட்ட மொத்த மனித இறப்புகளில் 73% மின்சாரம் தாக்கியதாகும், இதில் மின்சாரத் தீ மற்றும் மின்னல் ஆகியவை முறையே 16% மற்றும் 11% ஆகும். அதிகம் அறியப்படாத உண்மை என்னவென்றால், தீ பரவும்போது, புகையை உள்ளிழுப்பது, நெருப்பை விட அதிகமான மக்களை கொல்லுகிறது. இந்த தீவிர அபாயங்களை நிவர்த்தி செய்ய, ஆர் ஆர் கேபில் -இன் நிர்வாக இயக்குநர் மற்றும் ஐ ஈ ஈ எம் ஏ -இன் முன்னாள் தலைவர், ஸ்ரீகோபால் கப்ரா, கேப் எலக்ட்ரிக் நிறுவனத்தின் எம் டி மற்றும் என் எஃப் ஈ-இன் உறுப்பினரான எஸ். கோப குமார் போன்ற தொழில்துறை தலைவர்களுடன் இணைந்து, இந்தியாவில் உயர்தர வயர்கள் மற்றும் கேபிள்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படாததை எடுத்துரைத்தனர்.

புதிய மற்றும் ஏற்கனவே உள்ள கட்டிடங்களில் மின்சார தீ பாதுகாப்பின் முக்கியத்துவத்தைப் பற்றி பொதுமக்களுக்கும் அதிகாரத்திற்கும் கல்வி கற்பிப்பது மிகவும் முக்கியமானது என்று தொழில்துறை தலைவர்கள் நம்புகின்றனர். வணிகங்கள் தீயில் பாதுகாப்பானதா என்பதை அவர்கள் உடனடியாக தீர்மானிக்க வேண்டும். உயர் நிர்வாக மட்டத்தில், தீ-பாதுகாப்பான சூழலை உறுதி செய்யும் இடங்கள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன என்பதில் முறையான மாற்றங்களைச் செயல்படுத்துவது அவசியமானதாக இருக்கிறது. குடியிருப்பு சமூகங்களுக்கு, குறிப்பாக அதிக தீ ஆபத்து கொண்ட உயரமான கட்டிடங்களுக்கு, வழக்கமான தீ தணிக்கைகள் மற்றும் பயிற்சிகள் முக்கியமானவையாக இருக்கின்றன.

இதை கருத்தில் கொண்டு, போலி வயர்கள் மற்றும் கேபிள்கள் அல்லது தரமற்ற தரம் குறைந்த வயர்களை கட்டிடம் கட்டுபவர்கள் பயன்படுத்துவதற்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க சட்டம் கொண்டு வருவதன் முக்கியத்துவத்தை தலைவர்கள் வலியுறுத்தினர். போலி தயாரிப்புகள் இந்தியாவில் அதிகரித்து வரும் கவலையாக உள்ளன. இதனால் தேசத்திற்கு கணிசமான இழப்பு ஏற்படுகிறது எல்லாவற்றிற்கும் மேலாக, போலி வயர்கள் மோசமான தரபொருட்களால் ஆனவை என்பதால் நுகர்வோரின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் ஒரு ஆபத்தான பிரச்சினையாக இருக்கின்றன. வயர் மற்றும் கேபிள் உற்பத்தியாளர்கள் நாட்டில் பாதுகாப்பை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்க முடியும். உதாரணமாக, ஆர் ஆர் கேபில் இந்தியாவில் முதன்முதலில் எல் எஸ் 0 எச் (குறைந்த புகை, ஜீரோ ஹாலோஜன்) வயர்களை அறிமுகப்படுத்தியது, ஏனெனில் இந்த வயர்கள் எந்த வகையான விபத்து ஏற்பட்டாலும் வாயு, அமிலம் மற்றும் புகை ஆகியவற்றின் நச்சு கலவையை உருவாக்காது. 450001 ஆக்குபேஷனல் ஹெழ்த் அண்ட் சேஃப்டி மேனேஜ்மென்ட் சிஸ்டம் ஐ கொண்ட இந்தியாவில் உள்ள ஒரே நிறுவனமாக இது அனைத்து ஊழியர்களுக்கும் ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான பணிச்சூழலை உறுதி செய்கிறது.

ஆர் ஆர் கேபில் இன் நிர்வாக இயக்குநர் ஸ்ரீகோபால் கப்ரா, இந்த பிரச்சினைகளை பற்றி உரையாற்றுகையில், "நாட்டின் பெரும்பான்மையான உள்கட்டமைப்புகள், சரியான நெறிமுறைகள் மற்றும் கட்டிடக் கட்டுமானம் பற்றிய புரிதல் குறைவாக இருப்பதால், பல மின்சார தீ அச்சுறுத்தல்களுக்கு அடிக்கடி ஆளாகின்றன. இந்த தீயினால் ஏற்படும் அபாயங்கள், உயிர் மற்றும் சொத்துக்கள், விலைமதிப்பற்ற ஆவணங்கள், நகைகள் போன்றவற்றின் மீது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. வாடிக்கையாளர்கள், மின் விபத்துக்கள் மற்றும் தீ விபத்துகளால் ஏற்படும் புகை உண்மையான தீயை விட மிகவும் ஆபத்தானது, மேலும் விளைவுகள் பெரும்பாலும் மரணத்திற்கேதுவானவை என்ற பாதகமான உண்மையை நுகர்வோர் அறிந்திருக்கிறார்கள். ஆர் ஆர் கேபில் -இல், நாங்கள் மின்சார தீ பாதுகாப்பு மற்றும் மின்சார தீ-பாதுகாப்பான, பிரீமியம்-தரமான வயர்களை பயன்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்து நாட்டில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் முன்னணியில் உள்ளோம். குடிமக்கள், மின்சார தீ பாதுகாப்பைப் புரிந்துகொண்டு, பாதுகாப்பான நாட்டைக் கட்டியெழுப்பவும், தர பிரச்சினைகளால் ஏற்படும் உயிர் இழப்புகளைக் கட்டுப்படுத்தவும் எங்களுடன் உறுதிமொழி எடுக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்." என்று கூறினார்.

கூடுதலாக, கேப் எலக்ட்ரிக் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் மற்றும் என் எஃப் ஈ இன் உறுப்பினர், எஸ். கோப குமார் கூறுகையில், "குடிமக்கள் தங்கள் வீடுகள் மற்றும் சுற்றுப்புறங்களுக்குள் தரமான வயர்கள் மற்றும் கேபிள்களின் முக்கியத்துவம் குறித்து அதிகம் தெரிந்துகொள்ள கடுமையான சட்டங்களும் மற்றும் விதிமுறைகளும் நடைமுறைக்கு வர வேண்டிய அவசியம் உள்ளது. ஒரு வலுவான மின் தீ-பாதுகாப்பான சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவது காலத்தின் தேவையாக இருக்கிறது, மேலும் அதன் முக்கியத்துவத்தைப் பற்றிய கல்வியின் மூலம் மட்டுமே இது நிறைவேற்றப்பட முடியும். இந்த முயற்சியின் மூலம், போலிப் பொருட்களை, குறிப்பாக போலி வயர்கள் மற்றும் கேபிள்களைப் புறக்கணிக்கும் இயக்கத்தில் சேர, நுகர்வோர் மற்றும் எங்கள் பங்குதாரர்கள் மத்தியில் இந்த மாற்றத்தை நாங்கள் ஏற்படுத்துவோம். எங்கள் மையத்தில் நுகர்வோரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு மக்களை நாங்கள் வலியுறுத்துகிறோம். தீ-பாதுகாப்பான தேசத்தை உருவாக்க நாம் ஒன்றிணைந்து செயல்படலாம்." என்று கூறினார்.

## ராஜமங்கலம் பகுதியில் கத்தியை காட்டி மிரட்டி கையால் தாக்கி 1.5 சவரன் தங்கச்சங்கிலி பறித்துச் சென்ற பழைய குற்றவாளி கைது. 1.5 சவரன் தங்கச்சங்கிலி பறிமுதல்.

சென்னை, மார்ச் 05 2023: சென்னை, மதுரவாயலச் சேர்ந்த மணிவண்ணன், வ/35 என்பவர் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார். மணிவண்ணன் நேற்று (04.03.2023) வேலை முடித்து மாலை சுமார் 04.00 மணியளவில் இருசக்கர வாகனத்தில் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தபோது, ராஜமங்கலம், செந்தில் நகர், 200 அடி ரோடு அருகே ஒரு நபர் மணிவண்ணனின் இருசக்கர வாகனத்தை மறித்து பணம் கேட்டுள்ளார். மணிவண்ணன் பணம் தர மறுக்கவே, அந்த நபர் கத்தியைக் காட்டி மிரட்டியும், மணிவண்ணனை கையால் தாக்கி, அவர் அணிந்திருந்த 1.5 சவரன் தங்கச்சங்கிலியை பறித்துக் கொண்டு தப்பியோடினார். உடனே மணிவண்ணன் சத்தம் போடவே, சற்று தொலைவில் இருந்த பொதுமக்களும், ரோந்து காவல் குழுவினரும் எதிரியை பிடித்து, வி-4 ராஜமங்கலம் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

வி-4 ராஜமங்கலம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் விசாரணை செய்ததில், பிடிபட்ட நபர் கிஷோர் குமார், வ/28, த/பெ.ரவீந்திர குமார், பெரியார் நகர் தாதங்குப்பம், வில்லிவாக்கம் என்பதும், கிஷோர் குமார் கத்தியைக் காட்டி மிரட்டி கையால் தாக்கி தங்கச்சங்கிலியை பறித்துக் கொண்டு தப்பிய போது பிடிபட்டதும் தெரியவந்தது.

அதன்பேரில், மேற்படி சம்பவம் குறித்து வி-4 ராஜமங்கலம் அங்காடி காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, எதிரி கிஷோர்குமாரை கைது செய்தனர். அவரிடமிருந்து புகாரதாரரின் 1.5 சவரன் தங்கச்ங்கிலி மற்றும் 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும் விசாரணையில் எதிரி கிஷோர்குமார் மீது ஏற்கனவே ராஜமங்கலம், கொரட்டூர், ஜெ.ஜெ.நகர் காவல் நிலையங்களில் 5 வழிப்பறி வழக்குகள் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி கிஷோர்குமார் விசாரணைக்குப் பின்னர் நேற்று (04.03.2023) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

## ராமாபுரம் பகுதியில் வீட்டிற்கு முன்பு நிறுத்தியிருந்த இருசக்கர வாகனத்தை திருடிய நபர் கைது. 1 இருசக்கர வாகனம் பறிமுதல்.



சென்னை, மார்ச் 05 2023: சென்னை, ராமாபுரம், நாயுடு தெருவில் வசித்து வரும் சுரேஷ்குமார், வ/30, த/பெ.கலைவாணன் என்பவர் நேற்று (04.03.2023) இரவு தனது யமஹா இருசக்கர வாகனத்தை மேற்படி வீட்டிற்கு முன்பு நிறுத்திவிட்டு, இன்று (05.03.2023) காலை பார்த்தபோது, அவரது இருசக்கர வாகனம் திருடு போயிருந்தது தெரியவந்தது. இது குறித்து சுரேஷ்குமார், ஆர்-11 ராமாபுரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின் பேரில், வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

ஆர்-11 ராமாபுரம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவயிடத்திற்கு சென்று, தீவிர விசாரணை செய்தும், சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்தும், மேற்படி இருசக்கர வாகனத்தை திருடிய சந்தானகுமார், வ/33, த/பெ.புண்ணியமூர்த்தி, பஜனை கோயில் தெரு, ராமாபுரம், சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து புகார்தாரரின் யமஹா இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரி சந்தானகுமார் விசாரணைக்குப் பின்னர். இன்று (05.03.2023) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட உள்ளார்.

# பார்கின்சன் நோயால் பாதிக்கப்பட்ட 60 வயது முதியவர் ஃபோர்டிஸ் வடபழனியில் ஆழ்ந்த மூளை தூண்டுதலுக்குப் பிறகு புதிய வாழ்க்கையைப் பெற்றார்



சென்னை, மார்ச் 05 2023: பார்கின்சன் நோயால் அவதிப்பட்டு வந்த 60 வயது முதியவர், வடபழனியின் ஃபோர்டிஸ் மருத்துவமனையில் புதிதாக நிறுவியுள்ள பார்கின்சன் மற்றும் இயக்கக் கோளாறு மையத்தில் ஆழ்ந்த மூளைத் தூண்டுதல் அறுவை சிகிச்சைக்குப் பிறகு வாழ்வில் புதிய நம்பிக்கையைப் பெற்றார். டிபிஎஸ் என்பது மூளையைத் தூண்டுவதற்கும் பார்கின்சனின் அறிகுறிகளைப் போக்குவதற்கும் மூளைக்குள் ஆழமான முடியளவில் மெல்லிய மின்முனைகளைப் பொருத்தும் ஒரு நரம்பியல் துறை நுட்பமாகும். நரம்பியல் துறைத் தலைவர் டாக்டர் கே பானுவின் வழிகாட்டுதலின் கீழ், டாக்டர் விகாஷ் அகர்வால் தலைமையிலான ஃபோர்டிஸ் குழு 10 மணி நேரம் நீடித்த அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக முடித்தது.

நோயாளி, அவரின் இயக்கம் முற்றிலும் முடங்கிய நிலையில் மற்றும் மருந்துகளுக்கும் பலன் இல்லாத நிலையில் வடபழனியில் உள்ள ஃபோர்டிஸ் மருத்துவமனையை அணுகினார். நோயின் தன்மையை கவனமாக பரிசீலித்த பிறகு, டாக்டர் விகாஷ் அகர்வால், பார்கின்ஸன் நோய் மற்றும் டிபிஎஸ் நிபுணர், டாக்டர் கே. விஸ்வநாதன், மூத்த ஆலோசகர் வலிப்பு மற்றும் நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர், டாக்டர் சுபா சுப்ரமணியன், நரம்பியல் நிபுணர் மற்றும் டாக்டர் கே. சுதாகர், நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் அடங்கிய நரம்பியல் நிபுணர்கள் குழு, டிபிஎஸ் தான் நோயாளியின் நிலைக்கு மிகவும் பயனுள்ள சிகிச்சையாக இருக்கும் என்று முடிவு செய்தனர். வடபழனி, ஃபோர்டிஸ் மருத்துவமனையின் பார்கின்ஸன் நோய் மற்றும் டிபிஎஸ் நிபுணர் டாக்டர் விகாஷ் அகர்வால் பேசுகையில், " கடுமையான பார்கின்சன் நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கும், உடல் ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு அதிக அளவு மருந்துகளை உட்கொள்பவர்களுக்கும் டிபிஎஸ் ஒரு வரப்பிரசாதம். அறுபது வயது நிறைந்த இந்நோயாளி, தீவிர பார்கின்சன் நோயின் மருந்து எதிர்ப்பு வடிவமான ஆஃப் டிஸ்டோனியா நிலையில் எங்களைப் பார்க்க வந்தார். எங்கள் மருத்துவ நிபுணர்கள் குழு 10 மணி நேரம் நீடித்த அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக முடித்து மூளையில் மின்முனைகளை பொருத்தினோம். முதல் சவால் என்னவென்றால், எந்த வொரு வயதானவர்களுக்கே உரித்தான சர்க்கரை, இரத்த அழுத்தம் போன்ற இதர நோய்கள் ஆகும். கூடுதலாக, உடலில் உள் உடல் உறுப்புகள் அல்லாத எந்த வகையான வெளிப்புற கருவிகள் வைக்கும்போது இரத்தப்போக்கு மற்றும் தொற்றுநோயை ஏற்படுத்தக்கூடும், இவை இரண்டும் பக்கவாதத்தில் முடிவடையும். மேலும், மூளையின் செயல்பாட்டை சோதிக்க நோயாளி மருத்துவர் கேட்கும் கேள்வியை புரிந்து பதிலளிப்பது அவசியம் என்பதால், நோயாளி விழித்த நிலையில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டும். டிபிஎஸ் அறுவை சிகிச்சையின் வெற்றி விகிதம் சிறப்பாக அமைய சரியான மருத்துவர்கள், நரம்பியல் வல்லுநர்கள் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பத்தை தேர்ந்து எடுப்பது அவசியமாகும். ஒரு வெற்றிகரமான அறுவை சிகிச்சையானது பார்கின்சன் நோயாளிகளுக்கு தரமான வாழ்க்கையை கிட்டத்தட்ட 15 ஆண்டுகள் வரை நீட்டிக்கிறது."

வடபழனி ஃபோர்டிஸ் மருத்துவமனையின் மண்டல இயக்குநர் மற்றும் தலைவர் திரு. வெங்கட ஃபனிதர் நெல்லூரி பேசுகையில், "ஃபோர்டிஸின் ஒருங்கிணைந்த பார்கின்ஸன் நோய் மற்றும் டிபிஎஸ் மையம் அதிநவீன சிகிச்சை அளிக்கும் நோக்கத்துடன் திறக்கப்படுவதை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். டிபிஎஸ் கிளினிக் இயக்கக் கோளாறுகளை நிவர்த்தி செய்து, நோயாளிகள் இயல்பான, தன்னிறைவான வாழ்க்கையை வாழ வழி வகுக்கும்." "தமிழகத்தில் இயக்கக் கோளாறுகளுக்கான சிறப்பு சிகிச்சை மையம் கொண்ட மருத்துவமனைகள் மிகக் குறைவு. எங்கள் மையத்தில் பார்கின்சன், ஆழ்ந்த மூளை தூண்டுதல் அறுவை சிகிச்சை மற்றும் பிற நரம்பியல் பிரச்சனைகளுக்கு சிகிச்சை அளிக்க நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர்கள், நரம்பியல் மயக்க நிபுணர்கள், மனநல மருத்துவர்கள், உளவியலாளர்கள், வலி மேலாண்மை நிபுணர்கள் மற்றும் நரம்பியல் மறுவாழ்வு நிபுணர்கள் உள்ளனர். அனைவருக்கும் ஏற்ற விலையில் டிபிஎஸ் சிகிச்சைகளை வழங்குவதை உறுதிசெய்ய நாங்கள் அனைத்து முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம் என்று திரு. வெங்கடா மேலும் கூறினார்.

# 26 உள்நாட்டு மற்றும் சர்வதேச இடங்களில் 300 மேற்பட்ட தனிப்-பயனாக்கப்பட்ட ஹனிமூன் பேக்கேஜ்களை மேக்மேட்ரிப் வழங்குகிறது




சென்னை, மார்ச் 05 2023: இந்தியாவின் முன்னணி சுற்றுலா நிறுவனமான மேக்மைட்ரிப், ஆச்சரியப்படவைக்கும் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட அழகான தேனிலவு தயாரிப்பு அறிமுகப்படுத்தியுள்ளது! உலகம் முழுவதும் 26 இடங்களில் 300 மேலான சுற்றபயண இடங்களை ஏற்படுத்தியுள்ளது. அவை ஹனிமூனுக்கான பிரத்யேக & காதல் தருணங்களை பின்னி பிணைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன . பாலியில் உள்ள தனியார் நீச்சல் குளங்கள் கொண்ட வில்லாக்கள் மற்றும் மாலத்தீவில் உள்ள பீச் வில்லாக்கள் போன்ற தனியார் மற்றும் ஆடம்பரமான தங்குமிடங்கள் உடன், ஒருவரின் நெருக்கமான தருணங்களை முழுமையாக அனுபவிக்கும் வகையில் பலவற்றை கொண்டுள்ளது. காதல் கூடல்கள் மற்றும் அனுபவங்கள், ஹனிமூன் திட்டமிடுபவர்கள் ஒவ்வொரு தம்பதியினருக்கும் தங்கள் பயணத்தை அர்த்தமுள்ள வழிகளில் வெளிப்படுத்தவும் தனிப்பயனாக்கவும் உதவுகிறது மற்றும் ஒரு புதிய வாழ்க்கையை ஒன்றாகக் கொண்டாடும் வகையில் பேகேஜ்களை கொண்டுள்ளது.

பயணிகளின் வன்மையான மற்றும் வழக்கமான ஹனிமூன் விருப்பங்களை உள்ளடக்கும் வகையில், எம் எம் டி ஹனிமூன், வெப்பமண்டல தென்கிழக்கு ஆசிய தீவுகளில் தீவு துள்ளல், இயற்கை எழில் கொஞ்சும் கடற்கரைகளில் சுயமாக ஓட்டுதல், படகு வீடு மற்றும் மர வீட்டில் தங்குதல், ஷாம்பெயின், ஸ்நோர்கெல் ஆகியவற்றில் செயின் நதியில் பயணம் செய்தல் போன்ற அனுபவங்களை கொண்டுள்ளது மேலும் ஒரு தனியார் மறைமுகமான ஒயின் பாதாள அறையில் வியன்னாஸ் ஒயின் ருசித்தல், இந்த சிறப்பாக வடிவமைக்கப்பட்ட ஹனிமூன் பேக்கேஜ்களில் மற்றவை.

மேலும், உலகம் முழுவதும் பயணம் செய்துள்ள 1000க்கும் மேற்பட்ட அதற்கென உள்ள முற்றிலும் பெண்கள் அடங்கிய விடுமுறை நிபுணர்கள் கொண்ட ஏற்படுத்தப்பட்ட குழு, இந்த தனிப்பயனாக்கக்கூடிய பேக்கேஜ்களை வடிவமைத்துள்ளனர் மற்றும் தென்னாப்பிரிக்காவின் திராட்சைத் தோட்டங்களாக இருந்தாலும், காஷ்மீரின் பனி மூடிய மலைகள், அல்லது மாலத்தீவின் ஜேட் கடல் கரையோரங்கள், சாகசம், வனப்பகுதி, கடற்கரைகள், மலைப்பாங்கான இடங்கள், பெருநகரங்கள் போன்ற அனைத்து பயண விருப்பங்களாக இருந்தாலும் அனைத்து கனவு இடங்களுக்கும் ஹனிமூன் இடங்களை கனவு காண சிரமமில்லாத திட்டமிடலுக்கு உதவுகின்றனர்.

"தம்பதிகள் தங்கள் ஹனிமூனில் வாழ்நாள் முழுவதும் நினைவுகளை உருவாக்குவதன் முக்கியத்துவத்தை நாங்கள் புரிந்துகொள்கிறோம், மேலும் ஒவ்வொரு ஜோடியின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் வெளிப்படையான விலை மற்றும் தனிப்பயனாக்கக்கூடிய தளம் மூலம் ஆன்லைனில் தகவலறிந்த முடிவுகளை எடுக்ககூடிய வகையில் பேக்கேஜ்களை வழங்குவதே எங்கள் முயற்சியாகும்," என்று மேக்மைட்ரிப்பின் விடுமுறைகள் மற்றும் அனுபவங்கள் வணிகத் தலைவர் ஜஸ்மீத் சிங் கூறினார்.

கூடுதலாக, எம் எம் டி ஹனிமூன் உறுதிப்படுத்தப்பட்ட கிடைக்கும் தன்மையை உறுதி செய்கிறது மற்றும் உறுதியளிக்கப்பட்ட வாகனங்கள் கொண்ட விமானங்கள் மற்றும் ஹோட்டல்களில் ஏற்ற இறக்கமான விலையிலிருந்து அன்பான பயணிகளைப் பாதுகாக்கும் வகையில் என ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட விஷயங்களை வழங்குகிறது. காதல் ஜோடிகளுக்கு தொந்தரவு இல்லாத பயணத்தை உறுதி செய்வதற்காக, பகுதி கட்டணம், ஈ எம் ஐ போன்ற நெகிழ்வான கட்டண விருப்பங்களின் வரிசை வழங்கப்படுகிறது.

அனைத்தையும் உள்ளடக்கிய பேக்கேஜ்கள், பட்ஜெட்டுக்கு ஏற்ற விருப்பங்கள், ஆடம்பரப் பேக்கேஜ்கள், அட்வென்ச்சர் பேக்கேஜ்கள் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய பல்வேறு பட்ஜெட்கள் மற்றும் விருப்பங்களுக்கான பலவிதமான விருப்பங்களை வழங்குகின்றன. உள்நாட்டு விடுமுறைக்கு ரூ 24,999 மற்றும் சர்வதேச விடுமுறைகளுக்கு ரூ 44,999 விலை வரம்பில் தொடங்கி, இந்த பேக்கேஜ்கள் தம்பதிகளின் தேவைகள் மற்றும் விருப்பங்களைப் பூர்த்தி செய்கின்றன, அவர்களுக்கு மன அழுத்தம் இல்லாத மற்றும் மறக்கமுடியாத ஹனிமூன் அனுபவத்தை உறுதி செய்கிறது.

# முத்தூட் ஃபின்கார்ப், குறு மற்றும் சிறு வணிகங்களுக்கு பிணையில்லாத தினசரி தவணை கடன்கள் திட்டமான, வியாபார் மித்ரா -ஐ அறிமுகப்படுத்துகிறது

சென்னை, மார்ச் 05 2023: இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மில்லியன் கணக்கான சில்லறை விற்பனையாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் சுயதொழில் செய்யும் தனிநபர்களை சுற்றியே உள்ளது என்பதில் இரகசியமில்லை. அவர்களின் வணிக வளர்ச்சியைப் பூர்த்தி செய்யும் வகையில், செயல்பாட்டு மூலதனம் மற்றும் வணிக வளர்ச்சிக்கான கடன்களை வழங்குவதன் மூலம், முத்தூட் ஃபின்கார்ப் ஒரு புதுமையான மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட திட்டமான 'வியாபார் மித்ரா வணிகக் கடன்கள்' ஐ அறிமுகப்படுத்துகிறது.

வியாபார் மித்ரா வணிகக் கடன்கள் மூலம், வர்த்தகர்கள், வணிக உரிமையாளர்கள் மற்றும் சுயதொழில் செய்யும் தனிநபர்கள் தங்கள் தினசரி பணப்புழக்கத்தின் அடிப்படையில் எந்த கூடுதல் பிணையமும் இல்லாமல் வணிகக் கடன்களைப் பெறலாம். நிதிச் சந்தையில் வியாபார் மித்ரா வெளியீட்டின் மூலம், வருமான வரி ரிட்டர்ன் ஆவணங்கள் இல்லாமலும், முன் சிபில் மதிப்பீடு பதிவுகள் இல்லாமலும் ஒருவர் வணிகக் கடன்களைப் பெறலாம். தினசரி வருமானம் ஈட்டும் கடை உரிமையாளர்கள் தினசரி திருப்பிச் செலுத்தும் விருப்பத்திலிருந்து பயனடைவார்கள், அவர்களின் வட்டிச்செலவை குறைப்பதன் மூலம் வங்கிக் கடன்களை விட வியாபார் மித்ராவை மிகவும் கவர்ச்சிகரமானதாக ஆக்குகிறது. இந்த புதிய திட்டமானது, முன் கூட்டியே செலுத்தும் கட்டணங்கள் இல்லாமை, வருடத்திற்கு மூன்று முறை வரை கடன் புதுப்பித்தல், எளிமையான மற்றும் விரைவான ஆவணப்படுத்தல் மற்றும் விரைவான கடன் வழங்கல் போன்ற பலன்களையும் வழங்குகிறது. வியாபார் மித்ரா பிப்ரவரி 15, 2023 அன்று தொடங்கப்பட உள்ளது மற்றும் நாடு முழுவதும் உள்ள 3600 க்கும் அதிகமான முத்தூட் ஃபின்கார்ப் கிளைகளில் கிடைக்கும்.

"முத்தூட் ஃபின் கார்ப் எப்போதும் நாட்டின் சராசரி குடிமகனின் வாழ்க்கையை மாற்றியமைப்பதோடு, வங்கியில்லாதவர்களுக்கு, எம் எஃப் எல் மூலம் முறையான வங்கித் துறைக்கு அவர்களின் முதல் நுழைவு வாயிலை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இது குறிப்பிட்ட வாடிக்கையாளர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக குறிப்பாக தினசரி வருமானக் குழுக்களுக்கு, தனிப்பயனாக்கப்பட்ட தயாரிப்பு ஆகும், இந்த முறை, நமது பொருளாதாரத்தை துடிப்புடன் வைத்திருக்கும் நாட்டின் குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்காக இதைச் செய்ய விரும்புகிறோம். நாட்டின் சில்லறை வர்த்தகர்கள் மற்றும் கடைக்காரர்களுக்கு அதிகாரம் அளிப்பதன் மூலம் பொருளாதாரத்தை உயர்த்துவதில் 'வியாபார் மித்ரா' குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கும் என்று நம்புகிறேன்'' என்கிறார் முத்தூட் ஃபின்கார்ப் லிமிடெட் -இன் தலைமை நிர்வாக அதிகாரி ஷாஜி வர்கீஸ்.

அதன் 136 ஆண்டுக்கும் மேலாக வாழ்க்கைகளை மாற்றியமைத்ததில் மற்றொரு பொன் இறகு சேர்க்கும் வகையில், வியாபார் மித்ரா, முத்தூட் ஃபின்கார்ப் உருவாக்கிய, வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட மற்றொரு தீர்வாகும். உணர்வுகளை புரிந்துகொள்ளும் திறன் மற்றும் சிந்தனைமிக்க திட்டங்களுக்காகப் பாராட்டப்பட்ட வியாபார் மித்ரா வேறுபட்டவர் அல்ல. ஒவ்வொரு நிறுவனப் பிரிவின் தனிப்பட்ட கோரிக்கைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை மனதில் கொண்டு இது குறிப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது .

முத்தூட் பாப்பச்சன் குழுமத்தின் முதன்மை நிறுவனமான முத்தூட் ஃபின்கார்ப் லிமிடெட், தங்கத்திற்கு எதிரான கடன்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு கடன்களை வழங்கும் நாட்டின் ஒரு முன்னணி என் பி எஃப் சி க்களில் ஒன்றாகும். பல ஆண்டுகளாக, நம்பிக்கையின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட ஒரு அமைப்பான முத்தூட் ஃபின்கார்ப், குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட குடும்பங்களை இலக்காகக் கொண்டு பரந்த அளவிலான திட்டங்கள் மற்றும் சேவைகளை வழங்கியுள்ளது. ஒவ்வொரு நாளும் 1,25,000 க்கும் மேற்பட்ட நுகர்வோருக்கு சேவை செய்து வரும் முத்தூட் பாப்பச்சன் குழுமம், நிதிச் சேவைகள், சுற்றுலா, போக்குவரத்து, ரியல் எஸ்டேட், ஐடி சேவைகள், சுகாதாரம், விலைமதிப்பற்ற உலோகங்கள், சர்வதேச சேவைகள் மற்றும் மாற்று எரிசக்தி உள்ளிட்ட பல துறைகளில் முத்திரை பதித்துள்ளது.

# சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள கடைக்கு டிரான்ஸ்போர்ட் மூலம் வந்த பார்சலில் வைத்திருந்த 12 ஐபோன்களை திருடிய வாகன ஓட்டுநர் உட்பட 4 நபர்கள் கைது. 9 ஐபோன்கள் மற்றும் பணம் ரூ.2.25 லட்சம் பறிமுதல்



சென்னை, மார்ச் 05 2023: சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள கடைக்கு டிரான்ஸ்போர்ட் மூலம் வந்த பார்சலில் வைத்திருந்த 12 ஐபோன்களை திருடிய வாகன ஓட்டுநர் உட்பட 4 நபர்கள் கைது. 9 ஐபோன்கள் மற்றும் பணம் ரூ.2.25 லட்சம் பறிமுதல்

சென்னை, இராயபுரம் பகுதியைச் சேர்ந்த முகமது சலீம், வ/46 என்பவர் சிந்தாதிரிப்பேட்டை பகுதியில் எலக்டிரானிக்ஸ் கடை நடத்தி வருகிறார். இவரது கடைக்கு டிரான்ஸ்போர்ட் மூலம் வந்த செல்போன்கள் அடங்கிய பார்சலில் இருந்த சுமார் ரூ.12.5 லட்சம் மதிப்புள்ள 12 ஐபோன்கள் திருடு போயிருந்ததாகவும், கண்டுபிடித்து தருமாறும் முகமது சலீம் எஃப்-1 சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மீது வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

எஃப்-1 சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்ததில், மேற்படி கடைக்கு டிரான்ஸ்போர்ட் மூலம் சரக்குகளை டெலிவரி செய்யும் டிரான்ஸ்போர்ட் வாகன ஓட்டுநர் மேற்படி ஐபோன்களை திருடியதும், பின்னர் அதனை மற்ற நபர்களிடம் கொடுத்து விற்பனை செய்ய சொன்னதும் தெரியவந்தது.

அதன்பேரில், மேற்படி ஐபோன்களை திருடிய டிரான்ஸ்போர்ட் வாகன ஓட்டுநர் 1.சௌந்தராஜன், வ/62, த/பெ.குப்புசாமி, பெருமாள் ரெட்டி தெரு, எழும்பூர், சென்னை, திருடிய ஐபோன்களை விற்ற 2.சீனிவாசன், வ/22, த/பெ.வெங்கடேசன், கோவிலூரம்மன் கோயில் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, 3.சரவணகுமார், வ/24, த/பெ.சீத்தாராம், எஸ்.ஏ.காலனி 1வது தெரு, வியாசர்பாடி, 4.நரேந்திரகுமார், வ/21, த/பெ.தினேஷ்குமார், நம்மாழ்வார் தெரு, யானைகவுனி, சென்னை ஆகிய 4 நபர்களை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 9 ஐபோன்கள் மற்றும் ஐபோன்கள் விற்ற பணம் ரூ.2,25,000/- பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் நால்வரும் விசாரணைக்குப் பின்னர். நேற்று (04.03.2023) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

ஹலோ மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# இந்தியாவில் வெற்றிகரமான 25 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் கிரண்ட்ஃபாஸ்



சென்னை, மார்ச் 05 2023: கிரண்ட்ஃபாஸ் இந்தியா நிறுவனம், இந்தியாவில் செயல்பாடுகள் தொடங்கி 25 வெற்றிகரமான ஆண்டுகள் நிறைவு செய்யப்பட்டிருப்பதை கொண்டாடுகிறது. இந்நாட்டில் நீர் மற்றும் பருவநிலை சவால்களுக்கு தீர்வுகாண நிலைப்புத்தன்மை, நகரமயமாக்கல், டிஜிட்டல்மயமாக்கல் ஆகியவற்றில் புதிய தரஅளவுகோல்களை நிறுவுவதன் மூலம் இந்திய பம்ப் தயாரிப்பு தொழில்துறையை மேம்படுத்தி மாற்றும் நோக்கத்தோடு 1998-ம் ஆண்டில் கிரண்ட்ஃபாஸ் அதன் இந்திய செயல்பாடுகளைத் தொடங்கியது. கிரண்ட்ஃபாஸ் நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் திரு. பால் டியூ ஜென்சன் இந்நிகழ்வின்போது பேசுகையில், "மிகச்சரியாக 25 ஆண்டுகளுக்கு முன்பு கிரண்ட்ஃபாஸ் நிறுவனத்தின் அந்நாள் தலைமை செயல் அலுவலரும் மற்றும் எனது தந்தையுமான நீல்ஸ் டியூ ஜென்சென், கிரண்ட்ஃபாஸ் இந்தியா நிறுவனத்தை தொடங்கினார். இந்தியாவில் மிகப்பெரிதாக வளர்ந்து வரும் சந்தையில் கிரண்ட்ஃபாஸ் - க்கு சிறப்பான வாய்ப்பு இருப்பதை அவர் சரியாக முன்கணித்தார். அதைத் தொடர்ந்து 1998-ம் ஆண்டில் சென்னையில் ஒரு விற்பனை அலுவலகத்தை நாங்கள் தொடங்கினோம். அதுவொரு மிகச்சிறந்த யோசனை என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது; இன்றைக்கு எங்களது மிக முக்கியமான சந்தைகளுள் ஒன்றாக இந்தியா திகழ்கிறது. உயர்தரமான தயாரிப்புகள், புத்தாக்க தொழில்நுட்பங்கள் மற்றும் ஆற்றல் - சேமிப்பு மற்றும் நிலைப்புத்தன்மையுள்ள நீர் தீர்வுகளுக்கான தேவை தொடர்ந்து வளர்ச்சி கண்டு வருவதை நாங்கள் பார்த்திருக்கிறோம்." என்று கூறினார். கிரண்ட்ஃபாஸ் இந்தியா நிறுவனத்தின் தேசிய அளவிலான தலைவர் திருமதி. உஷா சுப்ரமணியம் பேசுகையில், "சென்னை மற்றும் அகமதாபாத்தில் இரு தொழிலகங்களைக் கொண்டிருக்கும் நாங்கள், இந்தியாவின் பசுமை நிலைமாற்ற செயல்திட்டத்தை முன்னெடுப்பதில் அடுத்த நடவடிக்கையை இந்தியா வெற்றிகரமாக எடுப்பதற்கு உதவவும் மற்றும் நீர் பயன்பாட்டை மதிக்கவும், பாதுகாக்கவும் மற்றும் அதனை முன்னேற்றமடையச் செய்யவும் நாங்கள் வழங்கியிருக்கும் வாக்குறுதியை செயல்பாட்டில் வெளிப்படுத்தவும் உரிய தனிச்சிறப்பான நிலையில் நாங்கள் இருக்கிறோம். கடந்த பல ஆண்டுகளாகவே இந்தியாவில் எமது தயாரிப்புகளும் மற்றும் நாங்கள் வழங்கும் தீர்வுகளும் ஒரு முக்கியமான பங்கை ஆற்றிவருவதை நாங்கள் பார்த்திருக்கிறோம். எமது இந்திய பிசினஸ் பார்ட்னர்களோடும் மற்றும் உள்ளூர் அதிகார முகமைகளோடும் சேர்ந்து இந்நாட்டில் ஒரு ஆக்கப்பூர்வ மாற்றத்தை எங்களால் ஏற்படுத்த முடியும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்." என்று கூறினார். நிலைப்புத்தன்மையுள்ள வளர்ச்சிக்கான தமிழ்நாடு - டென்மார்க் கூட்டாண்மை நடவடிக்கையை நினைவுகூரும் வகையில் ஒரு சிறப்பு இரவு உணவு நிகழ்வை கிரண்ட்ஃபாஸ் இந்தியா இன்று இரவு ஏற்பாடு செய்திருக்கிறது. இந்நிகழ்வில் டென்மார்க் - ன் பட்டத்து இளவரசர் மற்றும் பட்டத்து இளவரசி, பருவநிலைக்கான அமைச்சர், தொழில்துறைக்கான அமைச்சர் மற்றும் இந்தியாவிற்கான டென்மார்க் நாட்டின் தூதர் மற்றும் தமிழ்நாடு மாநிலத்தின் தொழில்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு ஆகியோர் இவ்விருந்து நிகழ்வில் கலந்துகொள்ளவிருக்கின்றனர். 25 ஆண்டுகள் நிறைவடைந்ததை கொண்டாடும் இக்கொண்டாட்டம் மற்றும் இந்த இரவு விருந்து நிகழ்வின்போது, தமிழ்நாட்டின் திருக்கழுக்குன்றம் மாவட்டத்தில், தாழம்பேடு கிராமத்தில் 300 வீடுகளுக்கும் மற்றும் 1200 நபர்களுக்கும் பயனளிக்கக்கூடிய ஒரு நிறுவன சமூக பொறுப்புறுதி செயல்திட்டத்தை ஆதரிப்பதற்காக அரசு சாரா ஒரு தொண்டு நிறுவனமான ஹேண்டு இன் ஹேண்டு இந்தியா என்ற அமைப்புடன் ரூ.25,00,000 இலட்சம் மதிப்புள்ள ஒரு செயல்திட்டத்திற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கிரண்ட்ஃபாஸ் இந்தியா கையெழுத்திடவிருக்கிறது. பாரம்பரியமான நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை சீர்படுத்தி செயல்படுத்துவதன் மூலம் நீருக்கான அணுகுவசதியை இச்செயல்திட்டம் மேம்படுத்தும். இதற்கும் கூடுதலாக, இப்பகுதியில் வசிக்கும் வசதி குறைவான குடும்பங்களுக்காக வீடுகளில் கழிப்பறைகளும் கட்டித்தரப்படும்; மேலும், உயிரி பன்மயத்தை மேம்படுத்துவதற்கான ஒரு மியாவாக்கி வனமும் உருவாக்கப்படும்.

# மலபார் கோல்டு & டைமண்ட்ஸ்-ன் தமிழகத்தின் 20-வது ஷோரூமான ஆவடி கிளையை இந்திய நடிகை தமன்னா திறந்து வைத்தார்



சென்னை, மார்ச் 05 2023: உலகின் சில்லறை நகை விற்பனையில் வேகமாக வளர்ந்து வரும் முன்னணி நிறுவனமும் இந்தியாவில் பல்வேறு துறைகளில் கால்பதித்து தனது வர்தகத்தை விரிவாக்கி கொண்டு உள்ள மலபார் குழுமத்தின் முன்னோடி நிறுவனமான மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் நிறுவனம் தனது புதிய கிளையை இன்று சென்னை ஆவடி -இல் திறந்துள்ளது. புதிய ஷோரூமில் இரண்டு தளங்களில் அதிகமான இடவசதி, அதிகமான கலெக்சன்கள் அதிகமான டிசைன்கள் ஆகியவை இந்த ஷோரூமில் இடம் பெற்றுள்ளன. இந்த புதிய ஷோரூமை இந்திய நடிகை ஸ்ரீமதி.தமன்னா அவர்கள் திறந்து வைத்தார். திறப்பு விழாவில் திரு.யாசர் (மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் தமிழ்நாடு மண்டல தலைவர்), திரு.சபீர்அலி (மலபார் கோல்டு தமிழ்நாடு மண்டல வணிக தலைவர்), திரு.அமீர் பாபு (மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் தமிழ்நாடு வடக்கு மண்டல தலைவர்), திரு.சுதிர் முகமது (மலபார் கோல்டு தமிழ்நாடு தெற்கு மண்டல தலைவர்), திரு.சித்தார்த் (மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் சென்னை ஆவடி கிளை துணை தலைவர்), மற்றும் மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் மேலாண்மை உறுப்பினர்கள் மற்றும் கிளை ஊழியர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் தற்போது 10 நாடுகளில் 300 சில்லறை விற்பனை நிலையங்களுடன் உலகில் மிகப்பெரிய நகை விற்பனை நிறுவனமாக உருவெடுத்துள்ளது, தமிழ்நாட்டில் சென்னை, கோவை, மதுரை, நாகர்கோயில், திருநெல்வேலி, சேலம், ஈரோடு, தஞ்சாவூர், இராமநாதபுரம், தர்மபுரி, வேலூர், திருச்சி, கும்பகோணம், திருப்பூர் ஆகிய நகரங்களில் 20 கிளைகளை கொண்டுள்ளது.

இந்த ஷோரூமில் ஏராளமான தங்கம், வைரம், மற்றும் வெள்ளி, நகைகளின் தொகுப்புகள் உள்ளன. மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் விற்பனையகத்தில் கலைநயமிக்க அணிகலன்கள் கிடைப்பது சிறப்பம்சமாகும். அணிந்தாலே ஜொலிக்கும் வைரநகைகளான 'மைன்' பிரம்மாண்டமான வடிவமைப்புகளை கொண்டுள்ள வெட்டாதவைரத்தால் செய்யப்பட்ட 'எரா' மிகவும் பொக்கிஷமாக கருதப்படும் விலை உயர்ந்த கற்களால் செய்யப்பட்ட நகை தொகுப்பான 'பிரீசியா' நகைகள், கைவினைகலைஞர்களால் கையால் செய்யப்பட்ட நகைகளின் தொகுப்பான 'எத்தினிக்' நமது கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் பாரம்பரிய இந்திய நகைவடிமைப்புகளில் உருவான 'டிவைன்' குழந்தைகளுக்கான நகை தொகுப்பான 'ஸ்டார்லெட்' ஆகியவை இந்த ஷோரூமில் இடம் பெற்றுள்ளன.

# மாநகர பேருந்தின் முன் பக்க கண்ணாடி மீது கல்லை வீசி கண்ணாடியை உடைத்த நபர் கைது

சென்னை, மார்ச் 05 2023: சென்னை, திருமுல்லைவாயலைச் சேர்ந்த சுனில், வ/48 என்பவர், மாநகர பேருந்து நடத்துனராக பணிபுரிந்து வருகிறார். சுனில் நேற்று (04.03.2023) மாநகர பேருந்து தடம் எண்.26 என்ற பேருந்தில் நடத்துனராக வேலை செய்து கொண்டிருந்தபோது, மதியம் சுமார் சுமார் 03.00 மணியளவில், வள்ளுவர் கோட்டத்திலிருந்து கோடம்பாக்கம் நோக்கி சென்று கொண்டிருந்தார். அப்பொழுது பேருந்து கோடம்பாக்கம், பெரியார் நகர் பேருந்து நிறுத்தம் அருகே செல்லும்போது, ஒரு நபர் திடீரென சாலையை கடக்க பேருந்தின் முன் சென்றதால், ஓட்டுநர் திடீரென பேருந்தை நிறுத்தினார். உடனே, அந்த நபர் ஓட்டுநரை தகாத வார்த்தைகளால் பேசி கீழே இருந்த கல்லை எடுத்து பேருந்தின் முன் பக்க கண்ணாடி மீது வீசியதில், பேருந்தின் முன் பக்க கண்ணாடி உடைந்தது. உடனே, பேருந்தின் ஓட்டுநர், நடத்துநர் மற்றும் பொதுமக்கள் அந்த நபரை மடக்கிப் பிடித்து, காவல் கட்டுப்பாட்டறைக்கு தகவல் கொடுத்து, ஆர்-4 சௌந்தரபாண்டியனார் அங்காடி காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

ஆர்-4 சௌந்தரபாண்டியனார் அங்காடி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் விசாரணை செய்ததில், பிடிபட்ட நபர் நிதிஷ்குமார், வ/19, த/பெ.அன்பு, சிவா விஷ்ணு கோயில் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை என்பதும், பேருந்தை திடீரென நிறுத்தியதால், ஆத்திரத்தில் சாலையில் இருந்த கல்லை எடுத்து பேருந்தின் வீசி பேருந்தின் கண்ணாடியை உடைத்ததும் தெரியவந்தது. அதன்பேரில், மேற்படி சம்பவம் குறித்து ஆர்-4 சௌந்தரபாண்டியனார் அங்காடி காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, எதிரி நிதிஷ்குமாரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட எதிரி நிதிஷ்குமார் விசாரணைக்குப் பின்னர் நேற்று (04.03.2023) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# வி ஐ தனது ப்ரீபெய்ட் வாடிக்கையாளர்களை தொடக்கநிலை ரீசார்ஜ் பேக்குகளில் மிகச் சிறந்த பலன்களை வெறும் 99 ரூபாய் ரீசார்ஜ் மூலம் பெற அழைக்கிறது!

சென்னை, மார்ச் 05 2023: இந்தியாவின் முன்னணி தொலைதொடர்பு நிறுவனங்களில் ஒன்றான வி ஐ ,தமிழ்நாட்டில் உள்ள வாடிக்கையாளர்களை வெறும் 99 ரூபாய் ரீசார்ஜ் மூலம் தனது வலுவான நெட்வொர்க்கில் சேர அழைப்பு விடுத்துள்ளது. இந்தியா முழுவதுக்குமான மலிவான கட்டணத்தில் 99 ரூபாய் தொடக்க நிலை ரீசார்ஜ் திட்டத்தை வழங்கும் ஒரே பிராண்ட் வி ஐ என்பது குறிப்பிடத்தக்கது. இப்பொழுதே வி ஐ நெட்வொர்க்கிற்கு மாறுங்கள் என்று பொருள்படும் வகையிலான 'ஸ்விட்சு டு வி ஐ' புதிய பிரச்சாரத்தை அறிமுகப்படுத்தியிருப்பதன் மூலம் மொபைல் போன் வாடிக்கையாளர்களை வி ஐ நெட்வொர்க்கில் இணைய அழைக்கிறது வி ஐ. வெறும் 99 ரூபாய் ரீசார்ஜ் மூலம் 28 நாட்களுக்கு முழு நேர அழைப்புகளுக்கான டாக் டைம் மற்றும் 200 எம்பி டேடாவை அளிக்கிறது

தங்களது பணத்திற்கு ஏற்ற சிறப்பான சேவைகளை எதிர்பார்க்கும் வாடிக்கையாளர்களை அதிவேக வி ஐ நெட்வொர்க்கில் சேர அழைப்பு விடுத்திருக்கும், வோடஃபோன் ஐடியா லிமிடெட்டின் தமிழ்நாடு மற்றும் கேரளாவுக்கான கிளஸ்டர் பிசினஸ் ஹெட் திரு. எஸ். முரளி, "வி ஐ நிறுவனத்தில், நாங்கள் எப்போதும் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த, அனைத்து மொபைல் ஃபோன் வாடிக்கையாளர்களின் தேவைகள் மற்றும் எதிர்பார்புகளை மிகச்சரியாக புரிந்துகொள்வதில் பெரும் நம்பிக்கை கொண்டுள்ளோம். மக்கள் தங்களது அன்றாட வாழ்க்கையை எந்தவிதமான சிக்கல்களும் இல்லாமல் சமாளிக்க, மிக அவசியமான தங்குதடையில்லாத நெட்வொர்க் இணைப்பின் முக்கியத்துவத்தை நாங்கள் புரிந்து கொண்டிருக்கிறோம். இந்த தொடக்கநிலை ரீசார்ஜ் பேக் மூலம், அனைவருக்கும் ஏற்ற வகையில் மலிவான, கவர்ச்சிகரமான விலை ரீசார்ஜ் சிறந்த மொபைல் சேவைகளை வழங்குவதே எங்களது தொடர் முயற்சியாக இருந்தது வருகிறது. தமிழ்நாட்டில் மொபைல் ஃபோன் பயன்படுத்தும் வாடிக்கையாளர்கள் மற்றும் மொபைல் போன் பயன்படுத்தாத வாடிக்கையாளர்களும் கூட இப்போது 99 ரூபாயில் வி ஐ நெட்வொர்க்கில் சேரலாம். இதன் மூலம் இந்த டிஜிட்டல் யுகத்தில் மொபைல் கனெக்டிவிட்டியின் மூலமான ஏராளமான பலன்களைப் பெற்று பயனடைய முடியும். இந்தச் சிறப்பு சலுகையின் மூலம், சமூகத்தின் அனைத்து தரப்பு மக்களும் மொபைல் ஃபோன் பயன்படுத்த உதவுவதோடு, வாடிக்கையாளர்கள் எந்நேரமும் தங்களுக்கு நெருக்கமான நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் இணைந்திருக்க வேண்டுமெனவும் எதிர்பார்க்கிறோம்' என்றார்.

# இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் சமீபத்திய தாக்குதலுக்குப் பிறகு இந்திய மீனவர்களின் பாதுகாப்பு பிரச்சினையை எழுப்புகிறது



சென்னை, மார்ச் 05 2023: இந்திய மீனவர்கள் பிப்ரவரி 23 அன்று இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டு சிறைபிடிக்கப்பட்டனர் மற்றும் தாக்கப்பட்டனர். தகவல் கிடைத்ததும், வெளியுறவு அமைச்சகம் நடவடிக்கை எடுத்து, அவர்கள் பத்திரமாக அழைத்து வரப்பட்டனர். தமிழகத்தின் தரங்கம்பாடி மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களைச் சேர்ந்த 6 மீனவர்கள் தரங்கம்பாடி மீன்பிடி குக்கிராமத்திலிருந்து கடந்த பிப்ரவரி 21-ம் தேதி கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றது குறிப்பிடத்தக்கது. ஆனால், பாரம்பரிய கடல் நீரில் மீன்பிடித்ததால், அவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தினர். பிப்ரவரி 23 அதிகாலை 4:30 மணிக்கு, தாக்குதலில் காயமடைந்த 5 மீனவர்கள் தரங்கம்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். மத்திய மீன்வளத்துறை இணை அமைச்சர் எல்.முருகன், கடந்த வாரம் இலங்கை சென்று, பிப்ரவரி 23-ம் தேதி இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்ட இந்திய மீனவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் தனது ட்விட்டர் பதிவில், "இந்திய மீனவர்கள் மீதான சமீபத்திய தாக்குதல்களை உயர் ஸ்தானிகராலயம் இலங்கை அதிகாரிகளிடம் கடுமையாக எடுத்துக் கூறியுள்ளது. மேலும், இந்த விவகாரம் குறித்து விசாரணை செய்து, மீனவர்களுக்கு எதிராக எந்த வகையிலும் பலாத்காரம் மற்றும் வன்முறை பிரயோகிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யுமாறு #இலங்கை அரசை கேட்டுக் கொண்டுள்ளது.

மீனவர்களின் பிரச்சினைகள் மனிதாபிமானம் மற்றும் அவர்களின் வாழ்வாதாரம் தொடர்பானவை என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் மேலும் தெரிவித்துள்ளது. எனவே, இலங்கை அதிகாரிகளால் இந்திய மீனவர்கள் இத்தகைய துன்புறுத்தலுக்கு ஆளாகாமல் இருதரப்பு பொறிமுறைகள் மற்றும் இராஜதந்திர வழிகள் மூலம் இதுபோன்ற பிரச்சினைகளை தீர்க்க இந்தியா நம்புகிறது.